**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 - 2021**

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பீ.3 இன் ஐஐ ஆம் பிரிவின் 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

பகுதி – 01 இன் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சாகவிருந்த தற்போதைய கரும்பு, சோளம், முந்திரி, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுதொழல் விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். முதலீட்டு தயார்படுத்தல் உதவி, விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதம் எனும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,612.28 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.97 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.87 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,436.40 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 44.10 மில்லியன் மிகுதித் தொகை பயனாளிகளினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் பின்னோக்கி நிதியளித்தலின் கீழ் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டு குறைபாடுகள் | மொத்தம் ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயனாளிகள் வழங்கிய பங்களிப்புக்கள் உரிமையாண்மையின் கீழ் காட்டப்படாமல் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் பிழையாக காட்டப்பட்டுள்ளது. | 10.2 | குறிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டான 2022 இன் கணக்குகளில் திருத்தப்படும். | முறையான சமர்ப்பிப்பு பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இணை மானியக் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் இணை மானிய கடன்கொடுத்தோர்கள் கட்டுப்பாட்டுக் கணக்குகள் சமனாக காணப்பட வேண்டுமாயினும் நிதிக்கூற்றுக்களில் இக்கணக்குகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 3.96 | கடந்த ஆண்டில் கணக்கிணக்கம் செய்யப்பட்டாலும் வேறுபாட்டை இனங்காண முடியாதிருந்தது. இதுவொரு கையேட்டு முயையில் இருந்து ளுயபந யுஉஉியஉஉ முறைக்கு தரவு உள்ளீட்டை மாற்றும் போது ஏற்பட்ட தவறாகும். | வேறுபாட்டை இனங்கண்டு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

பெறுமதி சேர்க்கை மற்றும் உயர் பெறுமதி விவசாய உற்பத்திகளுக்கான சிறுதொழில் உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் விவசாய நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து கவர்தல் மற்றும் அந்நிய முதலீடுகள் ஊடாக வர்த்தக மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்தாலும் செயற்திட்டத்தின் தலையீட்டுடன் மேலதிக ஏற்றுமதி வருமானங்கள் மற்றும் மேலதிக வேலைவாய்ப்புக்கள் போன்ற தகவல்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இலங்கை அரசாங்கத்தினால் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு வட்டிக் கட்டணங்களாக மொத்தம் 302.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மூல செயற்திட்ட நோக்கங்கள் பின்னர் வேறுபடுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. குறிப்பிடக்கூடிய 03 செயற்திட்ட கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

(அ) முதலீட்டு தயார்படுத்தல் உதவி
(ஆ) விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான இணை மானியங்களை வழங்குதல்
(இ) பகுதியளவிலான கடன் உத்தரவாதம்

பின்வரும் அவதானிப்புக்கள் அதன்மீது மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கூறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இணை மானியங்கள் | (ா)உயர் வறுமை நிலை மூலம் வகைப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணம், முல்லைதீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனறாகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை போன்ற 07 முன்னுரிமை மாவட்டங்களில் அண்ணளவாக 350 விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்களுக்கு உதவுவதற்காக இணை மானிய நிகழ்ச்சித் திட்டம் எதிர்பார்க்கின்றது. எனினும், செயற்திட்டமானது கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மற்றும் குருநாகலை போன்ற 15 மாவட்டங்களை உள்ளடக்கி இணை மானியங்களை வழங்குவதற்கு தெரிவு செய்ததுடன் மொத்த மானியத்தில் 95.21 சதவீதமானவை மேற்குறிப்பிட்ட ஏனைய 15 மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. | உயர் முதலீடுகளுடன் கூடிய சாத்தியவள செயற்திட்டங்களைக் கொண்ட ஏனைய மாவட்டங்களிடமிருந்து செயற்திட்டங்கள் மற்றும் முதலீடுகள் என்பவற்றை பிஎம்யூ கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ை) செயற்திட்டமானது தொழில் முனைவோர் கம்பனிகளுக்கு இணை மானியங்களாக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 5,162.9 மில்லியன் தொகையை அங்கீகரித்திருந்த போதிலும் அங்கீகரித்த திகதியிலிருந்து 6 தொடக்கம் 48 மாதங்கள் வரையான காலப்பகுதி கடந்த பின்னரும் இணை மானியங்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்வரும் முக்கிய காரணங்களினால் தாமதமாகின்றது.<br>1. தொழில் முனைவோரின் நிதி தாமதமாக்கப்பட்டதுடன் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இவர் தயாரில்லை.<br>2. தேவையான சட்ட ஆவணங்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>3. கொவிட் நிலைமையினால் நாட்டின் முடக்க நிலைமை காரணமாக மேலதிக தாமதம் ஏற்பட்டது. | -மேற்படி- |
| | | (ைை) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் | செயற்திட்ட பணிகளினை துரிதப்படுததுவதில் தொழில் | -மேற்படி- |

அங்கீகரிக்கப்பட்ட இணை மானியத்தின் படி 544 தொழில் முனைவோர் கம்பனிகளுக்கான ரூபா 9,802 மில்லியன் தொகையில் முதற்கட்டமாக 128 கம்பனிகளுக்காக ரூபா 2,345 மில்லியன் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தது. உடன்பட்ட பணிகளின் முழுமையின்மை காரணமாக சம்பந்தப்பட்ட 400 தொழில் முனைவோர் கம்பனிகளுக்கான இரண்டாம் கட்டம் ரூபா 6,476.8 மில்லியன் பெறுமதி மேற்குறிப்பிட்ட கம்பனிகளுக்காக முதற்கட்டமாக விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 5 தொடக்கம் 15 மாதங்கள் வரையான காலப்பகுதி கடந்த பின்னரும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

முனைவோரின் இயலாமையே தாமதத்திற்கான பிரதான காரணமாகும். இது செயற்திட்டத்தின் தன்மைக்கு நெகிழ்ச்சியானதாக இருக்கின்றது. இத்துடன் ஜிஓஎஸ்எல் மூலம் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் உலகளாவிய ரீதியில் விதிக்கப்பட்ட பயணத்தடைகள் என்பவற்றின் காரணமாக முதலீட்டாளர்களால் தவிர்க்கமுடியாத தாமதங்கள் ஏற்பட்டது.

(ை) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 2 இன் 8 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு முன்மொழிவு மற்றும் இணை மானியங்கள் என்பன இரண்டு தொடக்கம் மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக அமுல்படுத்தப்படும். எனினும், 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 544 தொழில் முனைவோர் கம்பனிகளுக்காக ரூபா 9,802 மில்லியன் பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட இணை மானியங்களில் ரூபா 422 மில்லியன் பெறுமதியான 38 தொழில் முனைவோர்கள் மாத்திரமே முதலீட்டு நடவடிக்கைகளை 2021 ஆம் வருட இறுதியில் பூர்த்திசெய்திருந்தனர்.

இரு தரப்பினர்களும் தேவையற்ற தாமதங்களை நீக்குவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்களினுள் ஒரு பகுதியை துரிதப்படுத்தும் நோக்கில் பணிபுரிகின்றனர்.

-மேற்படி-

| | | | | |
|---|---|---|---|---|
| | | (எ)கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட சோதனை சரிபார்ப்புக்களின் படி 2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 17 கம்பனிகளுக்கான இணை மானியமாக ரூபா 98.10 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. இவைகள் செயற்பாடுகளை கைவிட்டதுடன் ரூபா 1.35 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் மீளப்பெறப்பட்டன என வெளிப்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டுகளில் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனிகளுக்கு எதிராக மிகுதி ரூபா 96.75 மில்லியனை மீளப்பெறுவதற்காக செயற்திட்டத்தின் மூலம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல் தொடக்கம் மேற்கொண்ட கள ஆய்வு கண்காணிப்பின் போதான பட்டியலை பராமரித்தார் 02 செயற்திட்டங்கள் மாத்திரமே இதனடிப்படையில் கைவிடப்பட்டுக்கொண்டு இருப்பதனை நாங்கள் அறிகின்றோம் என்பதுடன் செலுத்தப்பட்ட மானியங்களை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| | | (ஏ) 2019 பெப்ரவரியில் 07 அமுல்படுத்தல் உதவி பணிக்கூற்றின் படி மானிய முதலீட்டின் விளைவு மற்றும் தாக்கம் என்பவற்றின் கண்காணிப்பு ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான தகவல் சேகரிப்பு என்பவற்றை ஆரம்பிப்பதற்கான தேவையிருந்தும் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 03 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் எம் மற்றும் ஈ (ஆரூ நு) நிபுணர் பணிக்கமர்த்தப்பட்டதுடன் விளைவுகள் மற்றும் பெறுபேறுகள் மீது பொருத்தமான தரவு சேகரிப்புடன் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் மானியத்தின் தாக்கமானது தனித்தனியாக ஆய்வு செய்யப்படுகின்றதுடன் காலாண்டு அறிக்கைகளும் பிரித்தெடுக்கப்படுகின்றன. | செயற்பாடுகளை துரிதப்படுத்தி இது தொடர்பாக அறிவுவாய்ந்த பொறுப்பான தரப்பினர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பகுதியளவிலான கடன் உத்தரவாதம் | செயற்திட்டத்தின் பகுதியளவான கடன் உத்தரவாத கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் 2021 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வாளர்களின் பார்வையில் பகுதியளவான கடன் உத்தரவாதமானது உண்மையானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஆகும். பிசிஜீ இன் கீழான நிதிகள் இலங்கை மத்திய வங்கியின் கிராமப்புற அபிவிருத்தி திணைக்களப் (டிஆர்டி) பிரிவன் மூலம் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது. | தனியார் வங்கிகள் ஊடாக இக்கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான உதவியை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நுண்பாக மற்றும் சிறு செயற்திட்டத்திற்காக வணிக முன்மொழிவுகளை தயாரிப்பதற்கான உதவியை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்றினை செயற்திட்டம் கைச்சாத்திட்டது. எதிர்பார்த்த விளைவை அடையப்பெறாமையினால் ரூபா 8.85 மில்லியன் செலுத்திய பின்னர் ஒப்பந்தப் பணி முடிவுறுத்தப்பட்டது. மேலும், டிஎஸ்பி இன் உதவியுடன் தயாரிக்கப்பட்ட 58 வணிக முன்மொழிவுகளில் 09 தொழில் முனைவோர்கள் மாத்திரமே அவர்களின் முதற்பகுதியை கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 03 வரை பெற்றிருந்தனர் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமான செயலாற்றல் மற்றும் வழங்கப்பட்ட சேவைகளிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு நியாயப்படுத்தப்படுகிறது. பிஓடி (டீழுனு) செயற்திட்டத்தை அங்கீகரித்தாலும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தொழில் முனைவோர் தயாராக இருக்கும் போது மாத்திரம் இணை மானிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பின்னர் மானியம் விடுவிக்கப்படும். | செயற்திட்டத்தின் நோக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன் செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 குறைபயன்பாடுடைய வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் வழங்கும் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,869.38 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 61.19 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 52 சதவீதம் பிரதிபலிக்கின்ற மொத்தம் ரூபா 5,482.7 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 28.8 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | 2021.12.31 வரையான மொத்த செலவினங்கள் ரூபா 5,482.7 மில்லியாக இருந்ததுடன் இது அண்ணளவாக ஐ.அ.டொலர் 28.8 மில்லியன் ஆகும். ஏஎஸ்எம்பி கூறு 1 இற்கான மொத்த ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 61.19 மில்லியனாக இருந்தது. மொத்த எடுப்பனவு ஐ.அ.டொலர் 31.8 மில்லியனாக இருந்ததுடன் இது 52 சதவீதமாகும். | நிதிப்பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 4.25 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தள அடிப்படையிலான ஜிஐஎஸ் (புஜளு) மென்பொருள் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிவும் அனுபவமும் உடைய ஆலோசகரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பிறகு பொதியானது முழுமையாக பயன்படுத்தப்படுவதுடன் எதிர்பார்த்த அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு தகவல்கள் என்பவற்றை பெறக்கூடியவாறு செயற்திட்டம் காணப்படுகிறது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன் செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாகனங்களின் லிவான முகாமைத்துவம் காரணமாக செயற்திட்டத்தின் தேவைப்பாடுகளை முறையாக இனங்காணாமல் ஏற்கனவே கொள்வனவு | மோட்டார் கார் மூலம் அணுகுவதற்க சாத்தியமற்ற களப்பணி நோக்கத்திற்காக இவ் 02 வாகனங்களும் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட 10 வாகனங்களை ஒதுக்கிடாமல் மேலதிகமாக 02 வாகனங்களை செயற்திட்டம் வாடகைக்கு ஈடுபடுத்தியது. இதன்காரணணமாக, மீளாய்வாண்டின் போது வீணாக மொத்தம் ரூபா 3.06 மில்லியனை செலவளித்துள்ளது. சாரதிகளுக்கான இரு வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் சாரதிகளின்றி இரு மோட்டார் வாகனங்களை வாடகைக்கு ஈடுபடுத்தியமை கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது. | வாடகைக்கு ஈடுபடுத்தப்பட்டது. மோட்டார் கார்கள் பொதுவாக கொழும்பில் ஓடுவதற்காக பயன்படுத்தப்பட்டது. | |

## 3.4 புறம்பான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு பொருத்தமில்லாத பத்திரிகை விளம்பரத்தின் மீது மொத்தம் ரூபா 2.09 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | ரூபா 1.2 மில்லியனிற்கான விளம்பரம் - ஏஎஸ்எம்பி நோக்கெல்லையினுள் பெறுமதி கூட்டிய அபிவிருத்தி செயன்முறைகளில் ஈடுபடுத்தக்கூடிய எதிர்கால முயற்சியாளர்களாக தெரிவுசெய்யப்படக்கூடிய வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பத்தை கோருவதற்காக ஏற்பட்டதாகும். மேலும், 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு தீர்மானமான சூரிய சக்தி நீர்க்குழாய்களின் விளம்பரத்துக்காக ரூபா 403,000 ஏற்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன் செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |